## அக்டோபர் - நவம்பர் மாதங்களில் அறுவடையாகும் மரவள்ளிக்கிழங்கு விலை நிலையாக இருக்கும்

2013-14ல் உலகளவில் 277 மில்லியன் டன்கள் மரவள்ளிக்கிழங்கு சுமார் 20 மில்லியன் எக்டர் பரப்பளவில் இருந்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. நைஜீரியா (20%), தாய்லாந்து (11%), இந்தோனேசியா (9%) மற்றும் பிரேசில் (8%) ஆகிய நாடுகள் உலகளவில் மரவள்ளிக்கிழங்கு உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றன. உலக மொத்த மரவள்ளிக்கிழங்கு சாகுபடியில் இந்தியா பரப்பளவில் 25வது இடத்தையும், உற்பத்தயில் 11 வது இடத்தையும் பெற்றுள்ளது. மேலும், உற்பத்தித்திறனில் (34.95 டன்கள்/ எக்டர்) முதல் இடத்தை பெற்று சிறந்து விளங்குகிறது.

இந்தியாவில், மரவள்ளிக்கிழங்கு சாகுபடி பரப்பளவு 0.21 மில்லியன் எக்டர் ஆகவும், மொத்த உற்பத்தி 7.74 மில்லியன் டன்களாகவும் உள்ளது. இக்கிழங்கானது, தமிழ்நாடு (64%), கேரளா (32%) மற்றும் அசாம் (0.5%) ஆகிய மாநிலங்களிலும் பயிரிடப்படுகின்றது. இந்தியாவிலிருந்து மரவள்ளிக்கிழங்கு மற்றும் மரவள்ளிக்கிழங்கின் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான, மரவள்ளிக்கிழங்கு மாவு (ஸ்டார்ச்), ஜவ்வரிசி மற்றும் டெக்ஸ்ட்ரின் போன்ற மாற்றம் செய்யப்பட்ட மரவள்ளிக்கிழங்கு மாவுப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. 2013-14ல், இந்தியாவானது மரவள்ளிக்கிழங்கு ஏற்றுமதியில் உலகளவில், தாய்லாந்து, சீனா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக 8வது இடத்தில் உள்ளது. இந்திய மரவள்ளிக்கிழங்கு மற்றும் அதன் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி மதிப்பு 2012-13ல் ரூபாய் 77.37 மில்லியனிலிருந்து, 2013-14ல் ரூபாய் 189.46 மில்லியன் ரூபாயாக உயர்ந்துள்ளது.

இந்திய மரவள்ளிக்கிழங்கு உற்பத்தியில் தமிழ்நாடானது, 64 சதவீத பங்களிப்பை கொண்டு முதலிடத்தில் உள்ளது. மேலும், மரவள்ளிக்கிழங்கின் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான, மரவள்ளிக்கிழங்கு மாவு (ஸ்டார்ச்) மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியிலும் பெரும்பங்கு வகிக்கிறது. 1.21 இலட்சம் எக்டர் பரப்பளவில் குறிப்பாக நாமக்கல் (21%), தருமபுரி (19%), சேலம் (15%), விழுப்புரம் (14%), திருச்சி (9%), ஈரோடு (5%) மற்றும்

திருவண்ணாமலை (5%) உட்பட மொத்தம் 14 மாவட்டங்களில் மரவள்ளிக்கிழங்கு முக்கிய பயிராக பயிரிடப்படுகின்றது.

கடந்த மார்ச் - ஏப்ரல், 2014ன் போது குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 1350 வரை விற்பனையான மரவள்ளிக்கிழங்கின் விலை, தற்போது குறைந்து குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 700 முதல் 800 வரை விற்கப்படுகின்றது. இதே போல, 90 கிலோ மூட்டை ஒன்றுக்கு ரூபாய் 6700க்கு விற்கப்பட்ட மரவள்ளிக்கிழங்கு ஜவ்வரிசி கடுமையாக விலை குறைந்து ரூபாய் 3582 க்கு விற்கப்படுகிறது. மேலும், மரவள்ளிக்கிழங்கு மாவப்பொருளும் (ஸ்டார்ச்), 90 கிலோ மூட்டை ஒன்றுக்கு ரூபாய் 4000லிருந்து, ரூபாய் 2260 ஆக குறைந்துள்ளது. கடந்த ஆண்டு நல்ல விலை கிடைத்த போதும், இந்த ஆண்டு விலை வீழ்ச்சியின் காரணமாக பல விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். அதிகளவு மரவள்ளிக்கிழங்கு மாவுப்பொருள் (ஸ்டார்ச்), ஜவ்வரிசி உற்பத்தி மற்றும் குறைந்த இதன் தேவை ஆகியவை இந்த விலை வீழ்ச்சிக்கு காரணமாக கருதப்படுகிறது.

இந்த சூழ்நிலையில், வரும் மார்ச் - ஏப்ரல் மாதங்களில் மேற்கொள்ளப்படும் மரவள்ளிக்கிழங்கு நடவு முடிவுகளை விவசாயிகள் எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், கடந்த 15 வருடங்களாக சேலம் மொத்த சந்தைகளில் நிலவிய விலை பற்றி ஆய்வு மேற்கொண்டது. அதன்படி, வருகின்ற நவம்பர் முதல் டிசம்பர் மாதம் வரை அறுவடையாகும் மரவள்ளிக்கிழங்கிற்கு, விவசாயிகளுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.7 முதல் ரூ.8 வரை கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கண்ட தகவல்களை கொண்டு தங்கள் நடவு முடிவுகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் -</u>**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,

கோயம்புத்தூர் - 641 003.

தொலைபேசி – 0422 -2431405


**<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் -</u>**


பேராசிரியர் மற்றும் தலைவர்,

காய்கறிப் பயிர்கள் துறை,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,

கோயம்புத்தூர் - 641 003.

தொலைபேசி – 0422 -6611374,

0422-6611283